Registered as a Newspaper

# உதயன்


உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1-25

கவர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஷு ஆடி மீ 31 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 20 (16 – 08 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 224

Your Friends in Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
Shabra Unico Finance Ltd.

Your Friends in Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
shabra Unico Finance Ltd.



ஈரோஸ் இயக்கம் நேற்று பலாலியில் ஒப்படைத்த ஆயுதங்களின் ஒரு பகுதி. (படம்: ஜெயம்)

## 2500 இளைஞர் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், ஆக 16

இன்னும் சுமார் 2 ஆயிரத்து 500 இளைஞர்கள் பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து விடுதலையாகி நேற்று வீடுகளுக்குத் திரும்பிய இளைஞர்களில் ஒருவர் தெரிவித்தார். (உ-10-160)

## வெற்றி!

வெல்லிங்டன், ஆக 16

நியூஸிலாந்து பொதுத் தேர்தலில் ஆளும் தொழிற்கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது.

கடந்த ஐம்பது ஆண்டு கால அரசியல் வரலாற்றில் தொழிற்கட்சி இரண்டாவது தடவையாக தொடர்ந்து ஆட்சியைப் பிடித்தது இதுவே முதல் தடவை.

## ஜே. ஆர் - ராஜீவ் ஒப்பந்தத்துக்கு

# தெற்கில் எதிர்ப்பு குறைந்து வருகிறது

## ஆளும்கட்சிக்கு உள்ளும் மூச்சுக் குறைந்து விட்டது

கொழும்பு, ஆகஸ்ட் 16

இலங்கை — இந்திய (ஜே. ஆர். - ராஜீவ்) ஒப்பந்தத்திற்குத் தெற்கில் இருந்த எதிர்ப்பு மெதுமெதுவாகக் குறைந்து வருவதாக அரசியல் அவதானிகள் மதிப்பிட்டுள்ளனர்.

ஒப்பந்தம் கைச்சாத்தான கையோடு இருந்த எதிர்ப்பு இப்போது நியாயமான அளவு குறைந்துவிட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அரசாங்கக் கட்சிக்குள்ளே இருந்த எதிர்ப்பும் இப்போது மூச்சுக் குறைந்துவிட்டதாக மேலும் அறிய வருகிறது.

ஜே. ஆர். — ராஜீவ் ஒப்பந்தம் சென்ற மாதம் 29ஆம் திகதி கைச்சாத்தானதைத் தொடர்ந்து அதனை எதிர்த்து தெற்கில் பெரும் வன்செயல்கள் வெடித்தன. அரசாங்க உடைமைகள் பல

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் 300பேர் விடுவிப்பு

திருகோணமலை, ஆக.16

பூஸா, பெலவத்தை தடுப்பு முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டவர்கள் இந்திய இராணுவத்தினரால் திருமலை சிவன் கோயில் முன்றிலில் வைத்து உறவினர்களிடம் கையளிக்கப்பட்டனர்.

கடந்த இரண்டு தினங்களில் திருமலை மாவட்டத்தைச்சேர்ந்த 300க்கு அதிகமானவர்கள் விடுவிக்கப்பட்டனர். இந்தியக் கப்பலில் கொண்டு வரப்பட்ட அவர்கள் பிறிமா இறங்குதுறையில் இறக்கப்பட்டனர். (உ-எ-150)

## வடக்கு, கிழக்கில்

# முழு ஆயுதங்களையும் ஈரோஸ் ஒப்படைத்தது

— அலுவலகச் செய்தியாளர் கே. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், ஆக 16

ஈரோஸ் இயக்கம் வடக்கிலும், கிழக்கிலும் தன் வசம் இருந்த முழு ஆயுதங்களையும் நேற்று ஒப்படைத்தது.

மட்டக்களப்பில் நேற்றுப் பிற்பகல் 2-15 மணிக்கும், யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை 6-50 மணிக்கும் ஆயுத ஒப்படைப்பு ஆரம்பமானது.

இரண்டு மாவட்டங்களிலும் இருந்த முழு ஆயுதங்களையும் தாம் ஒப்படைத்து விட்டதாக ஈரோஸ் இயக்கப் பிரமுகர் ஒருவர் உதயனுக்கு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் பலாலி இந்திய இராணுவ அதிகாரிகள் அலுவலகத்தில் மாலை 6-50 மணியளவில் ஆயுத ஒப்படைப்புநிகழ்ச்சிஆரம்பமானது.

ஈரோஸ் இயக்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட படைத்துறை ஆணையாளர் திரு. எஸ். சண்முகம். ஏ. கே. ரக ஆயுதம் ஒன்றை பிரிகேடியர் ஜெரி டி. சில்வாவிடம் கையளித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## திபேந்தர்சிங் வந்து திரும்பினார்

யாழ்ப்பாணம், ஆக. 16

இந்திய தென் பிராந்திய தளபதி லெப்டினன்ட் ஜெனரல் திபேந்தர் சிங் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பதற்காக நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்தார்.

எனினும் இச்சந்திப்பு திட்டமிட்டபடி நடைபெறவில்லை.

இதனையடுத்து அவர் உடனடியாக இந்தியாவுக்கு திரும்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## ஈரோஸ் போட்டியிடாது

யாழ்ப்பாணம், ஆக. 16

வடகிழக்கு பகுதிகளில் தேர்தல் நடத்தப்பட்டால் ஈரோஸ் இயக்கம் தேர்தலில் கலந்துகொள்ளாது.

ஈழவர் முன்னணியைச் சேர்ந்த முக்கிய பிரதிநிதிகளே இத்தேர்தலில் போட்டியிடுவர்.

-இவ்வாறு ஈரோஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-10)



ஈரோஸ் இயக்கப் பிரமுகர் எஸ். சண் ஆயுதம் ஒப்படைக்கமுன் இந்திய உயரதிகாரி மேஜர் ஹர்கீத் சிங்குடன் கைகுலுக்குவதையும் அருகில் ஈரோஸ் பிரமுகர்களான பரா, நேசன், சங்கர் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: ஜெயம்)

## 18க்கு முன்னர் விடுவிக்கப்படாவிடில்

# தடுப்புக்காவல் கைதிகள் உண்ணாவிரத முஸ்தீபு

யாழ்ப்பாணம், ஆக. 16

இம்மாதம் பதினெட்டாம் திகதிக்கு முன்னர் தாங்கள் விடுதலை செய்யப்படாமல் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளதால் தாங்கள் தொடர்ச்சியாக உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானித்திருப்பதாக தமிழ் அரசியல் கைதிகள் அறிவித்திருக்கின்றனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் இந்திய, இலங்கை அரசுகளுக்கு எதிராக நடத்தப்படும் என்று பூஸா இராணுவத் தடுப்பு முகாமில்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## 6 யுவதிகள் உட்பட விடுதலையான 288 பேர் வீடுகளுக்கு திரும்பினர்

யாழ்ப்பாணம், ஆக. 16

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த பின்னர் விடுவிக்கப்பட்ட 288 இளைஞர்களும், 6 யுவதிகளும் நேற்று வடக்கே வந்து சேர்ந்தனர்.

காலி துறைமுகத் தடுப்பு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட 221 பேரும், பூஸா முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட 73 பேரும் நேற்று காங்கேசன் துறைமுகத்துக்கு இந்தியக் கப்பல்களில் வந்து சேர்ந்தனர்.

இவர்களில் பெரும்பாலானோர் கடந்த ஜூன் முதலாம் திகதி "ஒப்பரேஷன் லிபரேஷன்" நடவடிக்கை

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



சர்வ வல்லமை படைச்ச ஜே. ஆரை எதிர்த்து நிண்டு வெல்ல ஏலாது என்டு யோசிச்சுப் பின் வாங்குகினமோ பின்னை...!

### ஈரோஸ் பிரதிநிதி கூறுகின்றார் :

# ஆயுதங்களை மட்டும் நம்பி நாம் போராட்டம் நடத்தவில்லை

யாழ்ப்பாணம், ஆக. 16

ஈரோஸ் இயக்கம் எந்தவொரு காலகட்டத்திலும் ஆயுதங்களை நம்பி போராட்டம் நடத்தவில்லை.

மக்களை அரசியல் படுத்தல் மூலமே எமது போராட்டம்தொடரும்.

—இவ்வாறு ஈரோஸ் பிரமுகர் நேசன் ஆயுதம் ஒப்படைப்பிற்கு பின்னர் நேற்று பத்திரிகையாளர்

(4-ம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

16-8-1987

சுபநேரம்:- 9.05 முதல் 10.35 வரை
ராகுகாலம்:- 4.35 முதல் 6.05 வரை
கார்த்திகை விரதம்
அட்டமி 6-44 முதல் நாளை 7-00 மணி வரை

### விடுதலைப் புலிகள் இயக்கப்போராளி

# செல்வத்தின் மரணம் கொலை எனத் தீர்ப்பு

திருகோணமலை, ஆக.16

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த காளிராசா செல்வம் (வயது 21) என்பவரின் மரணம் கொலை என்று திருமலை நீதிவான் சுனில் இராஜபக்ஸ தீர்ப்பளித்தார்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை திருமலை ஸ்ரீ சண்முக வித்தியாலய வளவினுள் இடம்பெற்றது.

ஈ. பி. ஆர். எல். எப். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சிலரால் இவர்

(4-ம் பக்கம் பார்க்க)

## அலுவலக இடம்மாற்றம்

வரையறுக்கப்பட்ட

## ஹட்டன் ★ நாஷனல்வங்கி ★

மேற்படி வங்கியின் யாழ். கிளை இல. 54, ஸ்ரான்லி வீதியிலுள்ள தற்போதைய தற்காலிக அலுவலகக் கட்டடத்திலிருந்து

இல. 212, 214 ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கிளையின் முன்னைய அலுவலகக் கட்டடத்திற்கு

வாடிக்கையாளரின் வசதி கருதி 17-08-1987 திங்கட்கிழமை முதல் இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனையும் அன்று முதல் வங்கியின் அனைத்து அலுவல்களும் வழமை போல் நடைபெறும் என்பதனையும் வாடிக்கையாளர் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

— முகாமையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ( சின்னஞ் சிறு விளம்பரம் )

### விற்பனைக்கு

5-ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தில் 1½ பரப்புக் காணியோடு சகல வசதிகளும் பொருந்திய 4 அறை வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திரு. J. A. இராசரெத்தினம், 386, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (1503)

மூளாய் மருத்துவக் கல்லூரிக்கு அண்மையில் மூன்று பரப்பு வளவும் சகல வசதிகளும் கொண்ட வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- ஜெகதீஸ்வரன், மகேஸ் ஸ்ரோர்ஸ், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (1477)

வாழ் நாள் முழுவதும் வழி காட்டியாக இருக்கும் உன்னதமான எண் ஜோதிட நூல் 'வாழ்க்கைக்கு நலம் தரும் நியூமராலஜி, தனிப்பிரதி 6/50 "தேனிசைமழை" ஐந்தாம் பாகம் புதிய பாடல்கள் நிறைந்தது. நான்கு ரூபா. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். ராஜன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். கிருஷ்ணசாமி புத்தகசாலை, யாழ்ப்பாணம். நாயகபாலன்ஸ்டோர்ஸ், மானிப்பாய். திருக்கணிதபுத்தகசாலை, சாவகச்சேரி. (1482)

சகல தளபாடங்களுடன் வீடு ஒன்று கரம்பொனில் விற்பனைக்கு உண்டு தொடர்பு: திரு. வி. ரி. யோசப், முருகன் வீதி, கரம்பொன், ஊர்காவற்றுறை (1468)

### தேவை

சகல துறையிலும் தொடர்பு கொள்ளக் கூடிய பேனா நண்பர்கள் தேவை. Dinesh Trevin Mahadevan 14/13, Park-Flats, Park Street, Colomdo-2. (1485)

### காணவில்லை

திருமதி சரோஜினி தேவி குமாரசாமி எனபவரை 12. 8. 87 புதன்கிழமை தொடக்கம்காணவில்லை. வயது40, வெள்ளைநிறம், கத்தரிப்பூக்கலர் சேலை அணிந்திருந்தார். கண்டவர்கள் கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும் திரு. V. குமாரசாமி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (4184)

### தவறிவிட்டது

அண்மையில் எடுக்கப்பட்ட கலியாண படச்சுருள் ஒன்று இரண்டு கிழமைக்குள் யாழ் நகரப்பகுதியில் தவறிவிட்டது. இதைக்கண்டு எடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு தயவு செய்து தொடர்புகொள்ளவும். S. Baskaran தொலைத் தொடர்பு பரிசோதகர், தொலைத் தொடர்பு காரியாலயம், யாழ்ப்பாணம். (1483)

### சேவை

உங்கள் தேவைகளை உடனுக்குடன் குறைந்த செலவில் குறித்த நேரத்தில் செய்து கொள்ள யாழ் நகரின் முதன்மை நிறுவனம் 'கிளீன்கட்' எங்களிடம் சகலஅளவுகளிலான போட்டோஸ்ரட், தெளிவான ரோனியோ பிரதிகளையும் தமிழ் ஆங்கில 'ரைப்பிங்'வேலைகளையும் எவ்வேளையிலும் பெற்றுக் கொள்ளலாம். உங்களின் திருப்தியே எமது சேவை 'கிளீன்கட்'இல: 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (1763)

தரமான உள்ளக வெளிப்புற வர்ணப் புகைப்படங்களை சிறந்த முறையில் படம் பிடிக்க நாடுங்கள் எலக்ரோ போட்டோ, 117, கனகரத்தினம் வீதி, அரியாலை யாழ்ப்பாணம். விளம்பரப் பலகைகளும் சிறந்த முறையில் எழுதித் தரப்படும் ([illegible])

### மணமகள் தேவை

உயர் வேளாளகுல நட்சத்திரம் மூலம், கனடாவில் குடியுரிமை பெற்று தொழிற்சாலை ஒன்றில்தொழில்புரிபவருக்கு 27 வயதுக்குட்பட்ட படித்த அழகான செவ்வாய்க்குற்றமற்ற மணமகள் தேவை. பெண்ணை இந்தியாவுக்கு அனுப்பி கலியாணம் செய்ய விரும்புவோர் சாதகக்குறிப்புடன் டாக்டர் சின்னத்துரை, புகையிரத வீதி ஏழாலை மேற்கு. தொடர்பு கொள்ளவும். (1470)

### பிறந்தநாள் வாழ்த்து

யூசேப்பியஸ் அரன் மேரி தம்பதிகளின் செல்வப் புதல்வி ஜோஅரன் தனதுமுதலாவது பிறந்த நாளை நேற்று அவுஸ்திரேலியாவில் குதூகலமாகக் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, தாளையடி அப்பம்மா, அத்தைமார், செல்வக்குருசித்தப்பா, பாட்டி, பாட்டன், பெரியப்பாமார், பெரியம்மாமார், மற்றும் கொழும்பு அம்மம்மா, அம்மப்பா, உறவினர், நண்பர்கள் இவரைச் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்கள். (1490)

நமசிவ சோமேஸ்வரபிள்ளை நகுலேஸ்வரி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் யதிந்தன் இரண்டாவது பிறந்தநாளை 18 8-87ல் தாவடி இல்லத்தில் கொண்டாடவிருக்கின்றார் மிக மகிமையுடன் வாழ பெற்றோரும் மற்றோரும் வாழ்த்துகின்றனர். (1461)

# வலிகாமம் வடக்குப் பகுதிகளில்
# 1000 குடும்பங்கள் வீடிழப்பு

காங்கேசன், ஆக 16 சமீபத்திய இராணுவ நடவடிக்கைகளால் வலிகாமம் வடக்கில் சுமார் 1000 குடும்பங்கள் முற்றாக வீடுகளை இழந்துள்ளன. இக் குடும்பங்கள் மீண்டும் சென்று தமது சொந்த இடங்களில் குடியமர முடியாமல் உள்ளன ஆகவே, அவர்களுக்கு உடனடியாகக் குடியிருப்புகளை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு வலி வடக்கு பிரசைகள் குழுக்களின் ஒன்றியம் யாழ் அரச அதிபரிடமும் இலங்கை-இந்திய செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடமும் கோரியுள்ளது.

மேற்படிஒன்றியத்தின் கூட்டம் ஒன்றிய அலுவலகத்தில் சட்டத்தரணி வி. எஸ் கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

அப்போதே இவ்வாறு கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வலி. வடக்கில் இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிட உடனடியாக ஒரு குழுவை அனுப்புமாறு யாழ் அரச அதிபரிடம் கோரும் தீர்மானமும், மீளவும் தமது இருப்பிடங்களுக்குச் செல்லும் மக்கள் அங்கு உயிராபத்து இல்லை என்பதை உறுதி செய்தபின் செல்லுமாறு பொதுமக்களைக் கோரும் தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேறின (இ-68)

## 2,500 தற்காலிக வீடுகள்
## நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் அமைக்கும்

கொழும்பு, ஆக. 16 மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு அம்பாறை ஆகிய பகுதிகளில் நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தின் புனர்வாழ்வு வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் எடுத்த கணக்கெடுப்பின்படி இப்பகுதிகளில் ஐயாயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது.

இதில் 2 ஆயிரத்து 500 தற்காலிக வீடுகள் நோர்வே சங்கத்தினால் உடனடியாகக் கட்டிக் கொடுக்கப்படும்.

இத்தகவலை நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளர் நாயகம் திரு. ஒட்கிருன் கொழும்பில் வெளியிட்டார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் எப்படியான புனர்வாழ்வுத் திட்டங்களை மேற்கொள்ளலாம் என்பது பற்றி நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் இன்னும் ஒரு வாரத்தில் அறிவிக்கும் என்றும் அவர் கூறினார்.

வன்செயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குறுகியகால நிவாரண உதவிகளையும் நீண்ட கால புனரமைப்புத் திட்டங்களையும் ஏற்படுத்தி உதவுவோம் என்றும் அவர் கூறினார். (உ-எ)

ஒப்பந்த விடயம் :

## இடையூறுகளனைத்தும் நீக்கப்படும் !

புதுடில்லி, ஆக 16 இந்திய-இலங்கை ஒப்பந்த அமுலில் எதிர்பார்க்கப்பட்ட இடையூறுகள் அனைத்தும் சரிவர நீக்கப்படும்.

—இப்படி பிரதமமந்திரி ராஜீவ்காந்தி வெள்ளியன்று செய்தியாளர் மத்தியில் தெரிவித்தார்

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இன்னும் இலங்கை இராணுவ முகாம்கள் உள்ளன என்று புலிகள் தலைவர் பிரபாகரன் கூறியுள்ளாரே?— இப்படி ஒரு செய்தியாளர்கேட்டார்.

"ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி இராணுவ முகாம்கள் எல்லாம் அகற்றப்படும்"—என்று பிரதமர் பதிலளித்தார்.

இதுவரை இந்திய-இலங்கை ஒப்பந்தம் திருப்திகரமான முறையில் அமுல் நடத்தப்பட்டு வந்துள்ளது என்றும் பிரதமர் சொன்னார். (உ. எ)

### அனுதாபம்

யாழ்ப்பாணத்தில் சண்ணி வெடிவிபத்தில் இரண்டு இந்திய வீரர்கள் உயிரிழந்தமை குறித்து ஜனாதிபதி ஜெயவர்த்தன அனுதாபம் தெரிவித்திருக்கிறார். (உ-எ)

## உங்களுடைய பொருளா?

யாழ்ப்பாணம், ஆக 16 மாவிட்டபுரம், பளை-வீமன்காமம், மயிலிட்டி வடக்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் இராணுவம் தங்கியிருந்த வீடுகளில் அவர்களால் விட்டுச் செல்லப்பட்ட பெறுமதியான மேலதிகப் பொருட்கள் அந்த வீட்டுச் சொந்தக்காரர்களினால் இப்பகுதிகளுக்கான கிராம சேவையாளர் திரு. க. இராசதுரையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இப்பொருள்களின் உரிமையாளர்கள் அவற்றை இன்றுஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் மாலை 5-00 மணிக்கும் இடையில் மாவிட்டபுரம் வாளித் தொழிற்சாலைக் கருகில் உள்ள கிராம சேவையாளரின் அலுவலகத்தில் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என கிராம சேவையாளர் திரு. க. இராசதுரை தெரிவித்துள்ளார்.

## தமிழ்ப்பகுதி நிலைமை ஆராய்வு

கொழும்பு ஆக. 16 சமாதான ஒப்பந்தம் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், அதனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் பற்றி அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. (இ-எ)

## சமூக சேவையாளர் மறைவு

சமூக சேவையாளர் திரு தியாகராசா சிறிசுப்பிரமணியம் தமது 66 வயதில் மாரடைப்பால் காலமானார்.

ஆனையிறவு உப்பளத்தில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற இவர், இதற்கு முன் தமிழ் நாட்டில் 'மண்டபம் காம்ப்' இலங்கை நிர்வாகத்தின் கீழிருந்தபோது 16 ஆண்டுகள் காம்ப் இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றியவர்.

இக்காலப் பகுதியில் தமிழ் நாட்டுக்குச் செல்லும் இலங்கைப் பிரயாணிகளுக்கு மண்டபம் சார்பில் இவர் ஆற்றிய சேவை குறிப்பிடத்தக்கது. (உ)

## கவலைதெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 16 நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் மீதும் நல்லைஆதீன முதல்வர் மீதும் இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்ட ஹெலித் தாக்குதல் குறித்து குன்றக்குடி அடிகளார் கவலை தெரிவித்திருக்கின்றார்.

★ ★ ★

(உ-161)

யாழ்ப்பாணம், ஆக 16 யாழ் சண்ணி வெடிவிபத்தில் உயிரிழந்த இரண்டு இந்திய வீரர்களின் குடும்பத்தினருக்கு யாழ் வர்த்தக சங்கம் தனது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளது. (உ-எ)

## பாலம் திறந்துவிடப்பட்டது

மட்டக்களப்பு, ஆக. 16 கடந்த சில மாதங்களாக மூடப்பட்டிருந்த வலையிறவு - வவுணதீவு பாலம் தற்போது பொதுமக்கள் பாவனைக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளது (உ-21)

## பண்ணை தீக்கிரை துப்பாக்கிகள் அபகரிப்பு

கொழும்பு, ஆக. 16 சிருடையில் சென்ற ஆயுதம் தரித்த இளைஞர் கோஷ்டி ஒன்று குண்டசாலை விவசாயத் திணைக்களத்துக்குச் சொந்தமான கரந்தகொல்ல பண்ணையைத் தீக்கிரையாக்கியதுடன் அங்கிருந்த துப்பாக்கிகள் மற்றும் ஆயுதங்களையும் அபகரித்துச் சென்றது.

புதன்கிழமைஅதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

90 ஏக்கர் பண்ணையில் விடப்பட்டிருந்த வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டன.

இத்தாக்குதலில் ஈடுபட்ட இளைஞர் கோஷ்டி நவீனரக ஆயுதங்களை வைத்திருந்தது என்று பொலீஸாருக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (இ-எ)

## சிங்கக் கொடிக்கு அருகில் புலிக்கொடி

மட்டக்களப்பு, ஆக16 மட்டக்களப்பு நகரில் உள்ள மணிக் கூட்டுக் கோபுரத்தில் ஏற்கனவே பறக்க விடப்பட்டிருந்த சிங்கக்கொடிக்கு அருகில் தற்போது புலிக் கொடியும் பறக்கவிடப்பட்டுள்ளது. (உ-21)


# பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா, ஈராக் ★

| | | | |
|---|---|---|---|
| 1. | V. K. ஐயாத்துரை | H 0377361 | புத்தூர் |
| 2. | V. S. பரமசிவம் | J 0047709 | கோண்டாவில் |
| 3. | K. குணசிலன் | H 0433269 | நல்லூர் |
| 4. | J. ராஜதுரை | H 0312207 | — |
| 5. | V. சிவகுருநாதன் | G 0329634 | காங்கேசன்துறை |
| 6. | P. குணபாலன் | H 0312207 | ,, |
| 7. | S. சிறிஸ்காந்தராசா | H 0464394 | — |
| 8. | A. பத்மநாதன் | G 0047702 | — |
| 9. | V. வாசுதேவன் | J 0066612 | — |

மேற் குறிப்பிட்டுள்ள அனைவருக்கும் பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் உடனடியாகக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

★ பின்வரும் வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் எம்மிடம் உண்டு

OPEN VISA

★ BEIRUT (லிபியா)
([illegible])

★ 3 வெற்றிடங்கள் மட்டுமே உண்டு
★ சாப்பாடு, இருப்பிட வசதிகளுடன் அடிப்படைச் சம்பளம் ரூபா 3500/-
★ உடன் தொடர்பு கொள்ளவும்.

★ JEDDAH (American Company) Maintenance Cleaners

(A) 25 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு மட்டும் சாப்பாடு இருப்பிடவசதியுடன் சம்பளம் மட்டும் 500 S. R. இவர்களது பயண ஒழுங்குகள் 15.09.87 ற்கு முன் செய்து கொடுக்கப்படும்.

(B) 21 வயதிற்கு மேற்பட்டவர்கள் CLEANERS சாப்பாடு இருப்பிட வசதியுடன் சம்பளம் 350 [illegible] R.

★ IRAQ (HOSPITAL CLEANERS JAPANESE COMPANY)

18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் சம்பளம் இருப்பிடவசதியுடன் 65 டினார். ஏற்கனவே பாஸ்போட் தந்தவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். அவர்களுக்கு விசா தயாராக உள்ளது. பிரயாண ஒழுங்குகளின் திகதி பின்பு அறிவிக்கப்படும்

★ தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

★ T. இந்திரநாதன் ★
M. THREE TRAVELS
96, Kachcheri Nallur Road,
Nallur, Jaffna.
(முத்திரைச் சந்திக்கு அருகாமையில்)



# LANKA CEMENT LTD.

எமது பாவனையாளர்!
வாடிக்கையாளர்களுக்கு!!

ஓர் நற்செய்தி

மீண்டும்
"லங்கா சீமெண்ட்"
விற்பனைக்கு வந்து விட்டது

NEW GENERATIONS USE
LANKA CEMENT
FOR STRENGTH & DURABILITY

WE SAY IT
OUR CUSTOMERS CONFIRM IT

புதிய தலைமுறை நீண்ட நாள் பாவனைக்கும் உறுதிக்கும் இன்று பாவிப்பது
லங்கா சிமெண்ட்

நாம் சொல்லுகிறோம்
பாவனையாளர்கள் உறுதிப்படுத்துகிறார்கள்

Head Office;-
M/s LANKA CEMENT LTD.
7th Floor,
130, W. A. D. Ramanayake Mawtha,
Colombo - 2.
Phone— 54751, 547746 & 541358

Factory:-
M/s LANKA CEMENT LTD.
Keerimalai Road,
Kankesanthurai.
Phone—22605, 22810


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக் கொள்ளுங்கள்; ஆனாலும் அவனுடைய மன ஐயங்களைக் குற்றமாய் நிர்ணயிக்காமல் இருங்கள்.

— பைபிள்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்; தொலைபேசி 24805 22078
16.8.1987 த.பெ.இல: - 23

## வேலையில்லாப் பிரச்சினை

இலங்கை இந்திய ஒப்பந்தம் சரிவர நிறைவேற்றப்படும் பட்சத்தில், இந்தியா சென்றிருக்கும் ஈழத் தமிழ் அகதிகள் அனைவரும் தாயகம் திரும்பியாக வேண்டும்.

கடந்த நான்கு வருடங்களாகத் தமிழர் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட அரசாங்கப் பயங்கரவாதத்தால் ஈழத்தமிழர்கள் இந்தியாவுக்கு மட்டும் அகதிகளாகச் செல்லவில்லை. தமது உயிரைக் காப்பாற்றும் நோக்குடன் பெரும் எண்ணிக்கையானோர் மேற்கு நாடுகள் பலவற்றுக்கும் தஞ்சம் கோரிச் சென்றனர். இவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்கள்.

இந்தத் தமிழ் இளைஞர்களில் பலர் 1981ஆம் ஆண்டில் நாட்டைவிட்டு ஓடியதும் உண்டு. பயங்கரவாதச் சந்தேக நபர்களைத் தேடுதல் என்ற போர்வையில் தமிழ் இளைஞர்கள் கண்ட கண்டவாறு கைது செய்யப்பட்டு, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட ஆரம்ப காலம் 1981, 82 ஆம் ஆண்டுகள் எனலாம்.

அப்போது முதல் வடமராட்சியில் ''ஒப்பரேஷன் லிபரேஷன்'' என்ற கர்ணகொடூர ஊழிக்கூத்து நடந்த 87 வரை தமிழ் இளைஞர்களும் மற்றவர்களும் வேற்று நாடுகளுக்கு அகதிகளாகப் படை எடுத்து வந்தனர்.

இவர்களில் ஆரம்ப காலத்தில் மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்றவர்களில், பெரும் எண்ணிக்கையானோருக்கு இன்னமும் அந்த நாடுகள் அரசியல் புகலிடம் அளிக்கவில்லை; அகதிகளாகவே இன்னமும் இருக்கின்றார்கள்.

ஆசப்பிந்தி, ஈழத்தமிழர்கள் அகதிகளாகப் பெரும் எண்ணிக்கையில் கனடாவுக்குச் சென்றனர். கனடா உட்பட ஏனைய மேற்கு நாடுகள் தமது குடியேற்ற விதிகளை இறுக்கிக் கொண்டதால் மேற்கு நாடுகளுக்குச் சென்ற ஈழத்தமிழர்கள் பல கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்தது.

ஸ்கன்டினேவியன் நாடுகளான நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகளுக்குச் சென்ற ஈழத் தமிழர்களும் இடையிடையே, இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படலாம் என்ற ஆபத்தான நிலை உருவெடுத்தது.

இப்போது தீர்வுக்கான ஏற்பாடுகள் முளைகொண்டிருப்பதைத் தொடர்ந்து, ஈழத் தமிழர்கள் அகதிகளாகச் சென்றடைந்த சகல நாடுகளும் அவர்களைத் திருப்பி அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ள நினைப்பது இயல்பு.

சில நாடுகள் இந்த விடயத்தில் மிக அவசரப்படவும் கூடும். ஒப்பந்தம் கைச்சாத்தாகிவிட்டது தானே, இனித் தமிழர்கள் தாயகம் திரும்பத் தடை ஏதுமில்லை என்று கூறி இப்போதே நாடு கடத்தவும் கூடும்.

ஆனால் நோர்வே இந்த விடயத்தில் அவசரப்பட மாட்டாது என்று அறிவித்திருக்கிறது. அதைப்போல ஏனைய நாடுகளும் பொறுத்திருக்குமா என்பது சந்தேகமே.

மொத்தத்தில், இந்தியா உட்பட வெளிநாடு சென்ற தமிழர்கள், குறிப்பாக இளைஞர்கள் தாயகம் திரும்ப உள்ளார்கள். அவ்வேளை தமிழ்ப் பகுதிகளில் வேலையில்லாத் திண்டாட்டமும் ஏனைய பிரச்சினைகளும் பெருமளவில் தலைதூக்கும் என்பது நிச்சயம்.

இப்போதே தமிழ்ப்பகுதிகளில் வேலையில்லாப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக உள்ளது. வெளிநாடு சென்றவர்களும் இங்கு வரும்போது அப்பிரச்சினை பூதாகாரமாக உருவெடுக்கும்.

புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் ஆகியவற்றுக்கு அடுத்து வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கும் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

அதற்கான திட்டங்களும் இப்போதே வகுக்கப்பட வேண்டும். எமக்குள்ள வளங்களைப் பயன்படுத்தி விவசாய, கைத்தொழில் மீன்பிடித் துறைகளில் தொழில் வளத்தைப் பெருக்கவல்ல பொருளாதாரத் திட்டங்கள் வகுக்கப்படுதல் அவசியம்.

குறிப்பாக, கிழக்கில் காடார்ந்து கிடக்கும் நிலவளத்தைப் பயன்படுத்தி - குடியேற்றத் திட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகளை நிறுவ முன்னுரிமை அளிக்கலாம். வடக்கிலும் பனைவளம், கடல்வளம் ஆகிய இரண்டையும் தக்கபடி பயன்படுத்தத் திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். இனிமேல் எமது மண்ணும், அதன் வளங்களுமே எமக்கு வாழ்வளிக்க வல்லன என்பதை மறந்து விடலாகாது. எமது மண்ணே எமது வாழ்வு என்ற மன உறுதியும் முயற்சியும் சேர்ந்தால் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்க முடியாமலா போகும்?

## வெங்கட்ராமன் உரை

புதுடில்லி, ஆக. 16

இந்திய சுதந்திர தினத்தை ஒட்டி ஜனாதிபதி இராமசாமி வெங்கட்ராமன் நேற்று நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

இன வன்செயல்கள், அரசியல் பயங்கரவாதம் ஆகியவற்றுக்கு இனியும் இடங்கொடுக்கமாட்டோம் என்று பிரதிக்ஞை எடுத்துக்கொள்வோமாக.

இப்படி ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்தார். (உ-எ)

# தீவிரவாதத்தை ஒழிக்கும் வரை இந்திய அரசு ஓயாது!

## ராஜீவின் சுதந்திர தின சூளுரை

புதுடில்லி, ஆக. 16

''தீவிரவாதத்தை முற்றாக ஒழிக்கும் வரை பாரத அரசு ஓயாது''

— இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று இவ்வாறு சூளுரைத்தார்.

இந்தியாவின் 40ஆவது சுதந்திர தினத்தை ஒட்டி நேற்றுக் காலை வரலாற்றுப் புகழ்மிக்க செங்கோட்டைக் கொத்தளத்திலிருந்து நாட்டு மக்களுக்கு அவர் உரையாற்றினார்.

மிகுந்த இன்னல்களுக்கிடையில் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்க மீண்டும் ஒரு முறை தங்களை அர்ப்பணிக்க முன்வருமாறு மக்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

வன்முறைக்கு நமது சமூகத்தில் இடமில்லை. தேசவிரோத, சமூக விரோத சக்திகளைப் பூண்டோடு ஒழிக்க அரசு திடசங்கற்பம் பூண்டிருக்கின்றது.

அமைதி, ஜனநாயக முறை ஆகியவற்றைக் குலைக்க தீவிரவாத சக்திகள் மேற்கொள்ளும் முயற்சிகளைக் கண்டு அரசு அஞ்சாது.

தீவிரவாதிகள் சரணடைந்து தீவிரவாதம் அகற்றப்படுவதற்கு அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

பிரிவினைவாத, வகுப்புவாத, அடிப்படைவாத, பயங்கரவாத சக்திகளே இன்று நாட்டின் முன்னுள்ள சவால்களாகும். இந்த சவால்களைச் சந்திக்க மக்கள் தயாராக வேண்டும்.

—இவ்வாறு அவர் வேண்டுகோள் விடுத்தார். (உ)

**வெளி உலகில்**

### விடுவிப்பு

வாஷிங்டன், ஆக 15

அதிபர் றேகன் சென்ற ஹெலிகொப்டருடன் மோத இருந்த விமானம் ஒன்றில் இருந்து கைது செய்யப்பட்ட இரண்டுபேரும் விடுவிக்கப்பட்டனர். (உ-எ)

## சீன விமானங்களுக்கு அமெரிக்க உபகரணம்

வாஷிங்டன், ஆக. 16

சீன ஜெட் யுத்த விமானங்களுக்கு அமெரிக்கத் தயாரிப்பான நவீன உபகரணங்கள் பொருத்தப்படும்.

இது சம்பந்தமான உடன்படிக்கை ஒன்று அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அமெரிக்கத்தயாரிப்பான எப் 16 சண்டை விமானங்களில் பொருத்தப்பட்டுள்ள நவீன உபகரணங்களை சீனாவின் எப்-8 விமானங்களுக்குப் பொருத்த இந்த உடன்பாடு வழி வகுக்கின்றது. (இ-எ)

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு

## மலேசியப் பிரதமர் தொடக்கி வைப்பார்

சென்னை, ஆக. 16

ஆறுவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை கோலாலம்பூரில் மலேசியப் பிரதமர் டாக்டர் மஹதிர் முகம்மது தொடக்கி வைப்பார் என்று அறிவிக்கப் பட்டு உள்ளது.

எதிர்வரும் நவம்பர் 15 இல் இம்மாநாடு ஆரம்பமாகின்றது. ஐந்து தினங்கள் மாநாடு நடைபெறும்.

மாநாட்டு அமைப்புக் குழுத் தலைவராக அமைச்சர் எஸ். சாமி பணி புரிகின்றார். இணைத்தலைவராக திரு. வி. டேவிட் இருக்கின்றார். (இ-எ)

## ரஷ்யா-ஈரான் குழாய்த் தொடர்பு

நிக்கோஸியா, ஆக. 15

ஈரானில் இருந்து நேராக சோவியத் யூனியனுக்கு எண்ணெய் விநியோகிக்கும் குழாய் அமைக்கும் திட்டம் இன்னும் மூன்று மாதங்களில் செயல்படத் தொடங்கிவிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தெஹ்ரான் வானொலி இதனை அறிவித்தது.

கருங்கடல் ஊடாக இந்தக் குழாய் சோவியத் யூனியனுக்குச் செல்லும்.

இதுசம்பந்தமாக ஈரானுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே அரசியல் உடன்பாடு ஒன்று ஏற்பட்டிருப்பதாக ஈரான் எண்ணெய் வள அமைச்சர் அறிவித்திருக்கின்றார்.

இந்தக் குழாய் மூலம் தினமும் 7 லட்சம் பீப்பாய் மசகு எண்ணெய் சோவியத் யூனியனுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

# என்னுடைய உயிர் எப்போதும் ஆபத்தில்; ஒப்பந்தம் அபாயத்தை கூட்டியுள்ளது

## பயமுறுத்தல்கள் குறித்து ஜே. ஆர்.

> லண்டன் டைம்ஸ், நியூயார்க் டைம்ஸ் பத்திரிகைகளுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா அளித்த பேட்டியின் இரண்டாவது பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

கேள்வி: எப்போது சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்?

ஜே. ஆர்.: செப்டம்பர் இறுதியில் அல்லது அக்டோபர் முதல் பகுதியில்.

கேள்வி: சரியான தாமதம். இந்த மாதத்தில் சமர்ப்பிக்க முடியாதா?

ஜே. ஆர்: அது சாத்தியம் இல்லை. சட்டமூலத்தை நான் தயாரிக்க வேண்டும். நாம் அவசரப்படக்கூடாது. நாடாளுமன்ற நடைமுறை வழக்கப்படி இடம்பெற அனுமதிப்போம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுடன் சம்பந்தப்பட்டவர்களுடன் நாம் பேசவேண்டும். மாகாண சபைகளின் தேர்தல் நடைமுறைகள் பற்றி இன்னும் பூரணமாக விவாதிக்கப்பட்டு தீர்மானிக்கப்படவில்லை.

கேள்வி: கொழும்புத் துறைமுகத்தில் இரண்டு இந்திய யுத்தக் சப்பல்கள் தரித்து நிற்கின்றன. உங்களுக்கு எதிராகச் சதிமுயற்சிகள் இடம் பெறுகின்றன என்ற வதந்தியை இது உருவாக்கியுள்ளதே!

ஜே. ஆர்: அரசாங்க உறுப்பினர்களுக்கு எதிராக கொலை, பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளன. ஒரு எம். பி. சுட்டுக் கொல்லப்பட்டார். சில எம். பீக்களின் வீடுகள் அழிக்கப்பட்டுவிட்டன. ராஜீவ் காந்தியின் உயிருக்கு உலைவைக்க முயற்சி நடந்தது. ஆகவே இந்திய அரசு ''உங்களுக்கு என்ன உதவி வேண்டுமோ, கேட்ட சில நிமிடங்களில் உதவ முன்வருவோம்'' — இப்படி என்னிடம் கூறியது. அவர்கள் இப்போது என் அனுமதியுடன் இங்கு இருக்கின்றார்கள்.

கேள்வி: உங்களுடைய உயிரும் ஆபத்தில் உள்ளதா?

ஜே. ஆர்: எப்போதும் ஆபத்தில். இந்த ஒப்பந்தம் அபாயத்தைக் கூட்டியுள்ளது.

கேள்வி: பயமுறுத்தல் பற்றிக் குறிப்பிட்டுக் கூறமுடியுமா?

ஜே. ஆர். தொலைபேசிப் பயமுறுத்தல்கள் தான் வருகின்றன.

கேள்வி: தமிழீழ விடுதலைப் புலிகள் முழு ஆயுதங்களையும் ஒப்படைப்பனரா? ஒப்படைக்காவிடில்...

ஜே. ஆர்: ஒப்பந்தத்தை முழுதாக எம்மைப் போல அமுல் நடத்த அவர்களும் உதவுவார்கள் என்று நம்புகின்றேன். அப்படிச் செயல்படாவிடில் இலங்கையும் இந்தியாவும் சேர்ந்து நடவடிக்கை எடுக்கும்.

கேள்வி: என்ன நடவடிக்கை என்று குறிப்பிட்டுக் கூறமுடியுமா?

ஜே. ஆர்: அதை நான் இப்போது சொல்ல முடியாது. நிலைமையைப் பொறுத்து நடவடிக்கை அமையும்.

கேள்வி: புலிகள் சில ஆயுதங்களை வைத்திருப்பர் என்று கூறப்படுகிறதே?

ஜே. ஆர்: பல வதந்திகள் இப்படி வருகின்றன. இது பற்றிய எதிர்பார்ப்புக்களில் நான் பங்கு கொள்வது இல்லை. ஒப்பந்தத்தை அவர்கள் முழுமையாக அமுல் நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

கேள்வி: தேர்தலில் தமிழர் தரப்பில் பயமுறுத்தல் செய்யப்பட்டால் என்ன நிலை ஏற்படும்?

ஜே. ஆர்: இருக்கக் கூடும். ஜனநாயக சமூகத்திலும் அவர்களின் பயமுறுத்தல் இடம் பெறுகின்றது. புலிகள் அல்ல, சாதாரண ஜனநாயக கட்சிகளும் இதில் ஈடுபடுகின்றன.

கேள்வி: அப்படி நடப்பின் நீங்கள் என்ன செய்வீர்கள்?

ஜே. ஆர்: நாட்டின் சாதாரண சட்டங்கள் செயல்படும். எமது பொலீஸ் நிலையங்கள் இயங்கும்.

கேள்வி: இந்திய இராணுவம் அப்போதும் இருக்குமா?

ஜே.ஆர்: அந்த நேரத்தில் அவர்களைப் பயன்படுத்துவேன் என்று நான் நினைக்கவில்லை. எல்லா ஆயுதங்களும் ஒப்படைக்கப்பட்டு விட்டால் அவர்கள் தேவை இல்லை.

கேள்வி: தேர்தல் சமயத்தில் ஒழுங்கை நிலைநாட்ட இந்திய இராணுவம் தேவைப்படாதா?

ஜே. ஆர்: இல்லை. அவர்கள் இங்கு அமைதி காக்கும் படையினர் தான். தேர்தலின்போது அவதானிகளே இருப்பர்.

கேள்வி: இராணுவ அவதானிகள்?

ஜே. ஆர்: இல்லை. இல்லை: அரசியல் அவதானிகள்— செஞ்சிலுவைச் சங்கத்தையும் சேர்த்து. வடக்கு, கிழக்கில் தேர்தல் ஒழுங்காக நடத்தப்படுகின்றதா என்பதை அவர்கள் கவனித்துக் கொள்வார்கள்.

கேள்வி: சர்வஜன வாக்கெடுப்புக்கு முன்னர் இந்திய இராணுவத்தை வெளியே அனுப்பி விட திடசித்தம் கொண்டுள்ளீர்களா?

ஜே. ஆர்: அமைதி மீண்டும் நிலைநாட்டப்பட்டால், வன்செயல்கள் நிறுத்தப்பட்டால், ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டால், அவர்கள் இங்கு தேவை இல்லை. எனது படைகளும் முகாம்களுக்குள் இருக்கும். முறையான சமாதானம் வந்து விட்டால் எனக்கு இலங்கை, இந்தியத் துருப்புக்களே தேவை இல்லை.

(வளரும்)

**நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்**

## திரு முருகா வா வா!

செந்தமிழ்த் தலைவா வா!
சண்முக நாதா வா!
சுந்தரக் குமரா வா! சூரசங் காரா வா!
கந்தனும் ஒளியே வா! கலியுக வரதா வா!
அந்தமில் இன்பமே அளித்திட வா வா!
தந்தையின் குருவே வா!
திருநல்லை இறைவா வா!
வந்தனை செய்தோம் வள்ளலே வா வா!
நொந்துளம் வாடியே நிர்க்கதி யாயுள
உந்தனின் அடியார்க்(கு) உதவிட வா வா!

நாயன்மார்கட்டு: ப. மகேந்திரதாசன்



**பொய்யாமொழி**

குறள்:
தமராகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும்.

பொருள்:
முன் சுற்றத்தாராக இருந்து பின் ஒரு காரணத்தால் பிரிந்தவரின் உறவு, அவ்வாறு ... காரணம் நீங்கிய பின் தானே வந்து சேரும்.

**சமய சந்நிதிகளில்**

### கடையிற் சுவாமி கோயிலில்

யாழ்ப்பாணம், ஆக. 16

யாழ்ப்பாணம் நீராவியடி கடையிற்சுவாமி சமாதிச் சிவாலயத்தில் நாளை திங்கட்கிழமை முதல் தொடர்ந்து பத்துத் தினங்களுக்கு இலட்சார்ச்சனையும் ஹோமமும் நடைபெறவுள்ளன.

இந்தப் பத்துத் தினங்களிலும் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று சுவாமி வீதியுலா அலங்கார உற்சவமாக நடைபெறும்.

தினமும் மாலை 5.30 மணியிலிருந்து 6 30 மணிவரை சமயப் பெரியார்களால் விசேஷ சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன.

27 ஆம் திகதி வியாழக்கிழமை மஹா சங்காபிஷேகம் நடைபெற்று, சுவாமி திருக்கல்யாணமாகி வெளி வீதியுலா நிகழும். அன்று நண்பகல் அன்னதானமும் நடைபெறும்.

**வாசகர் நிறுமுகம்**

## நகரைத் திட்டமிட்டு அமைப்பதே நல்லது!

'முட்டுக்கட்டை ஏன்' என்ற தலைப்பில் திரு. எஸ். பி. வேலாயுதபிள்ளை, (செயலாளர் வட இலங்கை வர்த்தக, கைத்தொழில் சம்மேளனம்) அவர்கள் எழுதிய கடிதம் தொடர்பாக —

வடபிரதேசக் கைத்தொழில்களின் அபிவிருத்தியில் அக்கறையும் பொறுப்பும் எங்களுக்கும் இருக்கின்றது என்பதால் இது விடயத்தில் எனது கருத்தையும் கூற விரும்புகிறேன்.

சுகாதாரம், போக்குவரத்துப் போன்ற மக்களின் நலன்களுடன் சம்பந்தப்பட்ட விடயங்களையே பாதிக்கும் உற்பத்தி நிலையங்களும், கைத்தொழில் நிலையங்களும் மக்கள் நெருங்கி வாழும் பகுதியிலிருந்து தூர இருக்கவேண்டும் என்பது ஒரு பொதுவான விதி.

அபிவிருத்தியடைந்துவரும் நகரங்களில் இதனைக் கருத்திற்கொண்டே தற்போது கைத்தொழில் வர்த்தக நிலையங்களுக்கு அனுமதி வழங்குகின்றார்கள்.

கைத்தொழில் நிலையங்களிலிருந்து வெளிவரும் நச்சுவாயுக்கள், இரசாயனக் கழிவுகள் மற்றும் கழிவுகள் நாளடைவில், மக்கள் சுவாசிக்கும், உண்ணும் பொருள்களுடன் கலந்து மனிதநலத்துக்குக் கேடு விளைவிப்பதை உலக நாடுகளில் காணலாம்.

இன்று யாழ்ப்பாணத்தில் பலவித நோய்கள் உலவுகின்றன.

இவற்றை மனதில்கொண்டு, யாழ்நகரை நவீனப்படுத்தி திட்டமிட்டு, சுகாதார அமைப்புக்களுடன் கட்டியெழுப்ப மாநகர ஆணையாளருடன் ஒத்துழைப்பதே நல்லது.

யாழ்ப்பாணநகரம், திட்டமிட்டு உருவாக்கப்பட்ட நகரமல்ல. பழைமையான கட்டடங்களும், ஒழுங்கற்ற முறையில் அமைந்த புதிய கட்டடங்களும், சீரற்ற வடிகால்களுமே யாழ்நகரை அலங்கரிக்கின்றன.

இலங்கையின் பிறபகுதிகளில், நகரங்கள் திட்டமிட்டு நவீன பொறியியல் வசதிகளுடன், பொது மக்களின் ஆரோக்கியத்தைப் பேணும் வகையில், நகர அபிவிருத்தி ஆணைக் குழுவின் ஆலோசனையுடன் உருவாக்கப்பட்டு வருகின்றன.

யாழ் நகரில் தற்போது வாகனங்களின் நடமாட்டம், மக்களின் நடமாட்டம், வியாபார ஸ்தாபனங்கள் என்பன அதிகரித்து வருவதால், எதிர்கால நலன்களையும் மனதிற்கொண்டு யாழ் நகரை ஒழுங்கு முறையில் புனரமைப்பதே சிறந்தது.

கடந்த நான்காண்டுகளில் யாழ்நகரமும் தமிழ் மக்களும் பலத்த சேதத்திற்குள்ளானார்கள் என்பது வேதனைக்குரிய விடயம்தான்.

எனினும் தீமையிலும் ஒரு நன்மையுண்டு. இன்று குண்டுவீச்சினால் சேதமடைந்துள்ள யாழ்

( 4-ம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பல வண்ணச் சேலைகள்
* அழகான பிளவுஸ்பீஸ்கள்
* சேட்டிங் சூட்டிங் புடைவைகள்
மற்றும்
* சகல றெடிமேட் ஆடைகளுக்கும்
விஜயம் செய்யுங்கள்

**மயூரா சென்ரர்**
70, ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்.



# உதயன்

16 - 08 - 1987 ஞாயிற்றுக்கிழமை



* பலவண்ணச் சேலைகள்
* அழகான பிளவுஸ் பீஸ்கள்
* சேட்டிங் சூட்டிங் புடைவைகள்
மற்றும்
* சகல றெடிமேட் ஆடைகளுக்கும்
விஜயம் செய்யுங்கள்

**மயூரா சென்ரர்**
70, ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்.


### அனுமதியின்றி 2 ஆவது பிரேத பரிசோதனை

# இணைப்பதிகாரிக்கு நீதிமன்றம் நோட்டீஸ்!

### ஆறுமுகநாதன் கொலை விடயத்தில் திருப்பம்

— திருகோணமலை மாவட்ட செய்தியாளர் —

திருகோணமலை, ஆக. 16

திருகோணமலை நகரில் புலிக்கொடி ஏற்றிய சம்பவத்தின்போது இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த ஆறுமுகநாதனின் மரண விசாரணை சம்பந்தமாக திருமலை இணைப்பதிகாரியை [illegible] ஆஜராகும்படி [illegible] நீதிவான் [illegible] உத்தரவிட்டார்.

ஆறுமுகநாதனின் சடலத்தின்மீது இரண்டாவது வைத்திய பரிசோதனை நீதிமன்ற உத்தரவின்றி நடத்தப்பட்டது பற்றிய விவரங்களை அறிந்து கொள்வதற்காகவே இணைப்பதிகாரியை ஆஜர் செய்யும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

ஆறுமுகநாதனின் மரண விசாரணை கடந்த செவ்வாய்க்கிழமை முடிவுற்றது. முடிவில் கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

அதன் பின்னரே இணைப்பதிகாரியை ஆஜர் செய்யும் உத்தரவைப் பிறப்பித்தார்.

மரண விசாரணையில் பிரேத பரிசோதனை செய்த டாக்டர் ஈ ஜி ஞானகுணாளன் சாட்சியமளித்தார்.

பதில் நீதிவான் ஆர். சந்திரபாலனின் உத்தரவின்படிதான் முதலில் பிரேதபரிசோதனை செய்யப்பட்டது. அதன் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்திய இராணுவத்தினர் பொலிஸாருடன் இறந்தவரின் சடலத்தைக் கொண்டு வந்து மீண்டும் பரிசோதனை செய்யச் சொன்னார்கள். அதன்படி பரிசோதனை செய்யப்பட்டது. அப்போது உடலில் ஒரு சன்னம் இருப்பது 'எக்ஸ்றே' மூலம் கண்டு பிடிக்கப்பட்டது.

இரண்டாவது பிரேத பரிசோதனையை நடத்துவதற்கு நீதிமன்றக் கட்டளை எனக்குக் கிடைக்கவில்லை.

— இப்படி டாக்டர் ஞானகுணாளன் தனது சாட்சியத்தில் சொன்னார்.

இதனை அடுத்து, நீதிமன்றத்தின் உத்தரவின்றி இரண்டாவது பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள திருமலை இணைப்பதிகாரியை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

(உ-எ-150)

### 6 யுவதி---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

களின் போது கைதுசெய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

விடுவிக்கப்பட்டவர்களை இந்திய செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் நேற்றுக் காலை யாழ் உதவி அரச அதிபர் திரு. த. குலசேகரத்திடம் ஒப்படைத்தனர்.

விடுதலைப் புலிகளின் கண்காணிப்புடனும், பராமரிப்புடனும் அவர்கள் பின்னர் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.


(உ-10-160)

### வாழ்த்துக்கூறிய சிப்பாய்கள்

குருநகர், ஆக 16

இலங்கை வந்துள்ள இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த சிப்பாய்கள் நேற்று யாழ்-கோட்டைக்குச் செல்லும் பிரதான வீதி வாயிலில் தம்மைச் சந்தித்த அனைவருக்கும் தமிழிலும், ஹிந்தியிலும் சுதந்திர தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

(உ-51)



ஈரோஸ் நேற்று பலாலியில் ஒப்படைத்த ஆயுதங்களில் 50 கலிபரும் அடங்கியிருந்தன. (படம்: ஜெம்)

### தெற்கில்...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

வும் நாசமாக்கப்பட்டன. பல கோடி ரூபா பெறுமதியான பொதுச் சொத்துகள் சேதமாக்கப்பட்டன.

அரச எதிர்ப்பு பூதாகாரமாக வெடித்தது. அரசியல் கட்சிகள் சிலவும் அதற்குப் பின்னணியில் நின்றன என்று கருதப்பட்டது.

ஆனால் இரண்டு வார காலத்தில் நிலைமை பெரிதும் மாறிவிட்டதாக அரசியல் அவதானிகள் இப்போது மதிப்பிடுகின்றனர்.

ஒப்பந்தத்துக்கான எதிர்ப்பு இப்போது குறைந்து விட்டதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆளுங்கட்சிக்குள் இருந்த எதிர்ப்பும் இப்போது மூச்சுக் குறைந்து விட்டதாம். ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் மூர்த்தண்யமாக எதிர்ப்பார் என எதிர்பார்க்கப்பட்ட பிரதமர் திரு. ஆர். பிரேமதாசவும் இப்போது வேறு மனப்போக்குடன் இருப்பதாக அவருடன் நெருங்கிய வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளதாம்.

எனினும் ஒப்பந்தத்தை உள்ளடக்கிய நகல் சட்டத்தை எதிர்வரும் 18ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை எனவும் அறிய வந்துள்ளது.

(அ)

### விளக்க மறியல்

கொழும்பு, ஆக. 16

தென் இலங்கையில் இடம்பெற்ற வன்செயல்கள் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள கம்பளை முன்னாள் எம்.பி. டி. எம். ஜயரத்தினவை இம்மாதம் 28ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும்படி கண்டி நீதவான் உத்தரவிட்டார்.

(உ-எ)

## வாசகர் திருமுகம்...

3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நகரைத் திருத்தியமைக்கும்போது திட்டமிட்டு, மக்களின் சுகாதாரம், போக்குவரவு, வாகனங்களின் நடமாட்டம், வர்த்தக நடவடிக்கைகள், கழிவு அகற்றும் வழிமுறைகள் என்பவற்றை மனதிற்கொண்டு, கைத்தொழில் நிலையங்களையும், இவற்றுக்குக் கேடு விளைவிக்கும் நிலையங்களையும் நகரத்திலிருந்து சற்றுத்தள்ளி அமைக்கும் ஆலோசனையை எந்தப் பொறுப்புள்ள பிரஜையும் மறுக்க மாட்டான்.

இப்படிச் செய்யும்பொழுது ஏற்படும் பொருளாதார இழப்புக்களை, மாநகர ஆணையாளருடன் கலந்து ஆலோசித்து நிவிர்த்தி காண்பதே சிறந்தது.

முன்னாள் மேயர் திரு அல்பிரட் துரையப்பாவுக்குப்பின், யாழ் நகரத்தின் அபிவிருத்தியிலும், தமிழ்மக்களின் நலனிலும் அக்கறை கொண்ட யாழ் மாநகர ஆணையாளரின் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்தக்கூடிய வகையில் உதவி, ஒத்துழைப்பதே இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு தமிழ்மகனின் கடமையாகும்.

ந சோமசுந்தர ஐயர்
பிராந்திய முகாமையாளர்
கைத்தொழில் அபிவிருத்திச்சபை,
யாழ்ப்பாணம்.

## தடுப்புக்காவல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் அறிவித்திருக்கின்றார்கள்

விடுதலை செய்யப்பட்ட தமிழ்க் கைதிகள் மூலம் பருத்தித்துறை பிரசைகள் குழுவுக்கு அவர்கள் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி, இந்தியத் தூதர், வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல அரசாங்க அதிபர்கள், சகல பிரசைகள் குழுக்கள், இலங்கைப் பல்கலைக் கழக மாணவர் சங்கம், பெண்கள் சமாதான சங்கம் ஆகியவற்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது

கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது;

இந்திய—இலங்கை ஒப்பந்தப்படி, தமிழர் பகுதிகளில் சமாதான நிலை உருவாகி இருப்பதாக அறிகிறோம்.

ஆயுத ஒப்படைப்புப் பற்றியும் கைதிகளுக்கு பொது மன்னிப்பளிப்பது பற்றியும் சுமுகமான முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிகின்றோம்

இதன்படி இம்மாதம் 18ஆம் திகதிக்குமுன்னர் சகல கைதிகளும் விடுவிக்கப்பட்டு விடுவரா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

பூசா இராணுவ முகாமில் உள்ள உயர்மட்ட அதிகாரிகளின் நிரந்தர மற்ற தடுமாற்றமான பேச்சுக்களில் இருந்தே இக்கேள்வி எழுந்துள்ளது

எதிர்வரும் 18ஆம் திகதி பூஸா இராணுவ தடுப்பு முகாம் மூடப்படும் என்றும் அதற்கு முன் அநேகமான கைதிகள் விடுவிக்கப்படுவர் என்றும் விடுவிக்கப்படாதோர் வெலிக்கடை மகஸீன் சிறைக்கு மாற்றப்படலாம் என்றும் இங்குள்ள உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியவில்லை.

சில கைதிகள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவார்கள் என்றும் அறிகிறோம்.

பூஸா முகாமில் உள்ள 3,170 கைதிகளில் இம்மாதம் 13 திகதிவரை 700 பேர் வரை விடுதலை செய்யப்பட்டனர்.

பொது மன்னிப்பு என்றால் சிலரை மட்டும் நீதிமன்றத்தில் ஏன் ஆஜர் படுத்த வேண்டும் என்பது எமக்குப்புரியவில்லை

எனவேதான் 18ஆம் திகதிக்குப் பின்னர் விடுதலைசெய்யப்படாத தமிழ்க் கைதிகள் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

—இப்படி கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது

(-எ)

### செல்வத்தின் ....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டுக் கொல்லப்பட்டார் என்று கூறப்பட்டது.

மரண விசாரணையில் கந்தசாமி விஜயகுமார் (வயது 22) சாட்சியமளிக்கையில் சொன்னதாவது:-

இறந்தவர் எனது நண்பர். சம்பவதினம் இறந்தவருடன் சைக்கிளில் வித்தியாலய வீதியில் வந்துகொண்டிருந்தோம் சண்முக வித்தியாலயச் சந்தியிலுள்ள சைக்கிள் கடையில் காற்று அடித்துக் கொண்டிருந்த போது இருவர் வந்தனர். ஒருவர் புஷ்பராசா, மற்றவர் நாசர்.

வந்தவர்கள் இறந்தவரை இழுத்துக்கொண்டு வித்தியால வளவுக்குள் புகுந்தனர். நானும் பின்னால் சென்றேன். தாங்கள் ஈ. பி. ஆர். எல். எப். என்று கூறிக்கொண்டே எம்மைத் தாக்கினர். பின்னர் வெடிச்சத்தம் கேட்டது நான் ஓருவாறு மதிலால் பாய்ந்து அடுத்த வளவுக்குள் புகுந்து இறந்தவரின் வீட்டுக்குச் சென்று நடந்ததைத் தெரிவித்தேன்.

பின்னர் இறந்தவரின் சடலம் உள்துறைமுக வீதியில் கிடப்பதாக அறிந்தேன்.

- இப்படி சாட்சி சொன்னார்.

### கிழக்கிலும் 280 பேர் விடுவிப்பு

மட்டக்களப்பு, ஆக 16

ஈரோஸ் இயக்கம் ஆயுதங்களை ஒப்படைத்த பின்னர், கிழக்கு மாகாணத்தில் உள்ள தடுப்பு முகாம்களில் இருந்த 280 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

### ஆயுதங்களை ...

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு, மலையக மக்களின் சுயநிர்ணய உரிமைகளை பாதுகாக்கக் கூடிய ஒரு அமைப்பு உருவாகும் வரை எமது போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

எமக்கு ஆயுதங்கள் பாதுகாப்பளிக்கவில்லை. மக்கள் பாதுகாப்பிலேயே நாம் வளர்ந்தோம். தொடர்ந்தும் மக்கள் எங்களைப் பாதுகாப்பார்கள்.

ஸ்ரீ லங்கா இராணுவத்தை அடக்கவே எமக்கு ஆயுதங்கள் தேவைப்பட்டன.

தற்பொழுது இந்திய அரசு பாதுகாப்பு வழங்குவதினால் நாம் ஆயுதங்களை ஒப்படைக்கிறோம்

—இப்படி அவர் தெரிவித்தார்.

(உ-10)

### தமிழகம் ஒத்துழைக்கும்

இலங்கை-இந்திய ஒப்பந்தம் அமுல் செய்யப்படுவதற்கு தமிழக அரசு முழு அளவில் ஒத்துழைப்பு வழங்கும்.

### முழு ஆயு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பலாலியில் நடைபெற்ற ஆயுத ஒப்படைப்பு வைபவத்தில் ஈரோஸ் பிரமுகர்களான சின்ன பாலா, நேசன், ஐயா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நூற்றுக்கு மேற்பட்ட ஆயுதங்கள், ஷெல் குண்டுகள் என்பன நேற்றுக் கையளிக்கப்பட்டன. விமான எதிர்ப்பு ஏவுகணைகள், றொக்கெட் லோஞ்சர்களும் அவற்றில் அடங்குகின்றன.

மட்டக்களப்பில் ஞான ஒடுக்க இல்லத்தில் வைத்து பிற்பகல் 2.15 மணிக்கு ஆயுத ஒப்படைப்பு நடந்தது.


Visit us for quality Chinese Foods

**Miaami Chinese Restaurant**

No 791/1, (Up tairs,) Point Pedro Road,
Kalviyankadu.
Phone: 22766

தரமான சைனீஸ் உணவுவகைகளுக்கு

**மயாமி**

**சைனீஸ் றெஸ்ரோரன்ட்**

791/1 (மேல்மாடி) பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.

Quick Takeaways!!
Open daily from 10 a. m. to 10 p. m.
(Near Dr. G. Kumerandiran's Medical Clinic)

(1491)



வெளிவாரி

**பட்டப்படிப்புக்கள்**

G. A. Q. கல்வியாண்டு 88/89 A/L பரீட்சையில் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 04-09-1987. இதற்கான விண்ணப்பங்களை நேரிலும் சுய விலாசமிட்ட தபால் மூலமும் பெற்றுக் கொள்ளலாம்.

இதற்கான வகுப்புக்கள்
05-09-1987இல் ஆரம்பமாகின்றன.

விரிவுரையாளர்கள்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | குமாரவேல் |
| தமிழ் | — | குழந்தை |
| இந்துநாகரிகம் | — | அருள்நங்கை |
| தெய்வியல் | — | வேல்சிவானந்தன் |
| புவியியல் | — | குணராசா |
| அரசியல் | — | குமார் |

விவரங்களுக்கு:

நிர்வாகி,
**உயர் கலைக் கல்லூரி**
ஆனைப்பந்தி, — யாழ்ப்பாணம்.



நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு
உதயன் நடத்தும்

**அதிர்ஷ்டப் பயணப் போட்டி**

பெயர்
முகவரி

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் மணிக்கோபுரங்கள் எத்தனை?

உதயன் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

நல்லூரை வழிபட்ட இரு ஈழத்துச் சித்தர்கள் யாவர்?

சஞ்சீவி வார இதழின் இலட்சிய வாசகம் என்ன?



**C. I. M. A.**

Stage II. & III.
Nov. -- 1987

Classes commenced Our Panel Includes

Mr. K. …anthakumar
„ S. Thilakakumar
„ K. Kamalakumar
„ S. Narendran

**North Ceylon Technical Institute**

14, St. Peters Lane, — Jaffna.



### ஓர் இனிமையான செய்தி!

1988ம் ஆண்டு தினசரிக் கலண்டர் உலகில் ஓர் ஒப்பற்ற பெயர்.

**அஷ்ட லக்ஷ்மி நாட்காட்டி**

நல்லூர் ஆதீனத்திற்கு முன்பாக அமைந்துள்ள எமது கலண்டர் கண்காட்சி புத்தகசாலையில் ரூபா 10/ முற்பணம் செலுத்தி கலண்டருக்குப் பதிவு செய்பவர்களுக்கு 'ஸ்ரீமுருகன் பஜனைப் பாடல்கள்' என்றநூல் 26-8-87 வரை அன்பளிப்பாக வழங்கப்படும்.

அஷ்டலக்ஷ்மி நாட்காட்டி நாளாந்தம் உங்களுக்கு விஞ்ஞானம், சோதிடம் சரித்திரம், சுகாதாரம், சமயம் என்பவற்றில் அறிவைத்தரும் ஓர் அற்புதத் தயாரிப்பு.

**சிவா பிறின்டேர்ஸ்,**
த. பெ. இல: 1,
கைதடி.

(1489)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது; வெளியிட்ட திகதி 16-08-1987

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Sunday August, 16 1987


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org